# ஆற்றுப்படை நூல்களில் அறவியற் சிந்தனைகள்

**திரவியநாதன் திலீபன்,** மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்களின் தொன்மையினையும் வழக்காறுகளையும் அறிவதற்கான வரலாற்றுச் சான்றுகளாகச் சங்க கால இலக்கியங்கள் திகழ்கின்றன. இவை குறித்த, சமூகத்தின் பதிவுகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்விலக்கியங்கள் தனித்துவமான இலக்கிய மரபினைக் கொண்டவையாகும். குறிப்பாக அன்றைய மக்களின் சமுதாயநிலை, சமயநிலை, வரலாற்று உண்மைகள், இலக்கியச் சிந்தனைகள், அறவியற் சிந்தனைகள் பற்றிய உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றன. குறிப்பாகப் பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்கள் ‘யான் பெற்ற இன்பம் பெறுக வையகமே’ என்ற பரந்த நோக்குடன் ஒருவருக்கொருவர் தத்தம் அனுபவங்களை எடுத்துரைத்து ‘வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுதல்’ இதன் சிறப்பம்சமாகும். இவ்வாற்றுப்படையானது, பொருளை வேண்டி ஆற்றுப்படுத்துவதாகவும் அருளை வேண்டி ஆற்றுப்படுத்துவதாகவும் அமையப்பெற்றுள்ளது. இவ்வாய்வானது ஆற்றுப்படை இலக்கியங்களின் சிறப்பம்சங்களையும் அவற்றில் புலப்படுத்தப்படும் அறவியற் சிந்தனைகள் பற்றியும்; ஆராய்வதாகவுள்ளது. குறிப்பாக அறவியற் சிந்தனைகளானவை சமூக அறம், விருந்தோம்பல், கொடைச் சிறப்பு, ஆட்சி அறம் என விரிவுபட்டிருந்தது. எனவே மேற்குறித்த அறப்பண்புகளைத் தெளிவுபடுத்தி அவற்றின் முக்கியத்துவத்தினை வெளிக்கொணர்வதே ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்விற்கு ஆற்றுப்படைசார் மூல நூல்களையும் அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளப் பதிவுகளையும் அடிப்படையாகக்கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

**அறிமுகம்**

சங்க இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்கு அடிப்படையாகவும் மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளைப் பறைசாற்றுகின்ற செவ்வியல் இலக்கியங்களாகவும் விளங்குகின்றன. இவ்விலக்கியங்கள் மனித நாகரிகத்தையும் பண்பாட்டமிசங்களையும் எடுத்துக்காட்டுவதோடு அக்கால சமூகத்தின் பதிவுகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றமை அவற்றின் தனித்துவமாகும்.

சங்க கால இலக்கியங்கள் அகம், புறம் என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டு அவற்றின் சிறப்பம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அகம் என்பது ‘புறத்தார்க்குப் புலப்படுத்தலாகா இன்பம்’ என்றும் புறம் என்பது ‘புறத்தார்க்குப் புலப்படுத்தத்தக்கவை’ என்றும் பகுக்கப்பட்டிருக்கின்றன. இதன்படி காதல், இன்பம், பொழுதுபோக்கு போன்றன அகம் சார்ந்தனவாகவும் போர், வீரம், வெற்றி, கொடைச் சிறப்புக்கள் புறம் சார்ந்தனவாகவும் விளங்குகின்றன. சங்க கால மக்கள் தூய காதலொழுக்கத்தையும் அறத்தினின்றும் வழுவாத வாழ்க்கை நெறிமுறைகளையும் சிறப்பாகப் போற்றி வந்தனர் என்பதனை அக்கால இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது (செல்வநாயகம், 2013:8). சங்க இலக்கியங்கள் ஒழுங்குமுறையாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டாக வகுக்கப்பட்டுள்ளன. இவை “மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டு எட்டுத்தொகையுங் கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக் கணக்கும்” எனப் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**ஆற்றுப்படை நூல்கள்**

தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் ஆற்றுப்படை இலக்கியங்கள் தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டுக்குரிய தனித்துவமாகும். வாழ்க்கையின் பல்வேறுபட்ட கூறுகளைப் படம்பிடித்துக்காட்டுகின்ற காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. குறிப்பாக வீரம், காதல், கொடைச் சிறப்பு, களவு, நிலையாமை, அறவியற் சிந்தனைகள் போன்ற கூறுகளைத் தெளிவாக எடுத்துரைத்திருக்;கின்றமை அவற்றின் சிறப்பம்சமாகும்.

ஆற்றுப்படை என்பதன் பொருள் வழிப்படுத்தலாகும். அதாவது செல்வந்தனிடம் பரிசில் பெற்று வரும் கூத்தர், பாணர், பொருநர், விறலி போன்றோர் வழியிடையே தம்மை எதிர்ப்பட்ட இரவலர்களது துயரைக்கண்டு ‘நின்னைப் போலவே யானும் இருந்தேன்’ என இரவலனின் நிலைகண்டு இரங்கித் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை அவர்களும் பெற்று மகிழும்படி வழிப்படுத்துதலேயாகும். அதாவது, “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே” என்ற பரந்துபட்ட நோக்குடன் ஒருவருக்கொருவர் தத்தமது அனுபவங்களை எடுத்துரைத்து “வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுதல்” இதன் தனித்துவமாகும். ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம்,

“கூத்தரும் பாணரும் பொருணரும் விறலியும்

-----------------------------------------------------------

சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்” (தொல்காப்பியம்: புறத்தினை, நூற்பா.30) என வரையறுக்கின்றது.

சங்க காலத்தில் தோற்றம்பெற்ற பத்துப்பாட்டில் ஐந்து இலக்கியங்கள் ஆற்றுப்படை இலக்கியங்களாகும். அவைமுறையே திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பனவாகும். இவ்வாற்றுப்படையானது, பொருளை வேண்டி ஆற்றுப்படுத்துவதாகவும் அருளை வேண்டி ஆற்றுப்படுத்துவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

**ஆற்றுப்படை இலக்கியங்களில் அறவியற் சிந்தனைகள்**

அறவியற் சிந்தனைகள் தனிமனிதர் தன்வாழ்வோடும் சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக்கொண்டு வாழும் நிலையில் காலம், இடம், சூழமைவு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும் அல்லாதனவற்றைத் தவிர்க்கவும் வழிகாட்டுவதோடு தேர்ந்தெடுத்தவற்றைச் சீரான முறையில் செயற்படுத்துவதற்கு வேண்டிய செயலறிவையும் வழங்குகின்றன. இக்காரணங்களால் அறவியற் சிந்தனைகள் தமது உயிரிலும் உயர்ந்தது என வைத்தெண்ணும் அளவிற்கு மனிதர்கள் மத்தியில் தாக்கஞ் செலுத்தியுமுள்ளன. இதனையே வள்ளுவர்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப்படும்” என வலியுறுத்தியதன் தாற்பரியமாகும்.

மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதி இலக்கியங்கள் அறம் பற்றிக் குறிப்பிடுகையில் ‘விதித்தன செய்தலும் விலக்கின ஒழித்தலுமே அறம்’ என வலியுறுத்துகின்றது. அதாவது சமுதாயத்தில் எவை எவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றவோ அவற்றைச் செய்தலும் எவை எவை நிராகரிக்கப்படுகின்றதோ அவற்றை விலக்குதலுமே அறம் எனக் குறிப்பிடுகின்றது.

எனவே, மேற்குறித்த கருத்தியல்களை அடிப்படையாகக்கொண்டு ஆற்றுப்படை இலக்கியங்கள் தெளிவுபடுத்தும் அறவியற் சிந்தனைகள் அக்கால மக்களின் வாழ்வியலிலும் அதனைப்

பிரதிபலித்துக்காட்டும் இலக்கிய மரபிலும் வேரூன்றிக் காணப்பட்டதோடு அச்சிந்தனைகள் சமூக அறம், விருந்தோம்பல், கொடைச் சிறப்பு, ஆட்சி அறம் எனப் பலவாறு விரிவுபெற்றிருந்தன.

ஆற்றுப்படை இலக்கியங்கள் சமூக அறவியற் சிந்தனைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அதாவது மிக்க வறியார்க்குத் தம்பால் உள்ளவற்றை உவந்து ஈயும் வள்ளல்களைப் புகழ்ந்து பாடி அவர்களிடம் வழிப்படுத்துவதாகும். குறிப்பாக 'பகிர்ந்து உண்டு பல்லுயிர் ஓம்புவோம்' எனும் கூற்றுக்கிணங்க அக்கால மக்கள் பேச்சளவில் மட்டுமன்றி தமது வாழ்க்கையிலும் அதனைப் பின்பற்றிச் செயல்படுத்திய பெருமைக்குரியவர்கள். இவ்வாற்றுப்படையானது பொருநரை ஆற்றுப்படுத்துவதால் பொருநராற்றுப்படையாகவும் கூத்தரை ஆற்றுப்படுத்துவதால் கூத்தராற்றுப்படையாகவும் வழங்கப்பட்டது.

ஆக, இவை வழிப்படுத்துவோனின் பெயரைக்கொண்டு விளங்குகின்றமையால் இப்பெயர்பெற்றது என்பது ஒருபுறமிருக்க மறுபுறம் சிறந்த அறப்பண்பாக விளங்கும் ஈகைத்திறன் அக்கால மக்களிடத்தில் காணப்பட்டிருக்கின்றது என்பது இதன்மூலம் அறியத்தக்கது. இதனையே வள்ளுவர்,

"ஈதலிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு" என்றவாறு வலியுறுத்துகின்றார்.

இதன்படி, பொருநராற்றுப்படை "ஆடுபசி உழந்த நின் இறும்பேர் ஒக்கலொடு நீடுபசி………" (பொருந, 61-63) என்றும் சிறுபாணாற்றுப்படை "இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்……….." (சிறுபாணா, 37-40) என்றும் கூத்தராற்றுப்படை "அகன்ற தாயத் தஃகிய நுட்பத்து இலமென மலர்ந்த………" (கூத்தரா, 551-552) எனப் பலவாறு பாடியிருக்கின்றமை தக்கசான்றுகளாகும்.

சங்ககால ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு மேலோங்கிக் காணப்பட்டமையையும் பலவாறு அறியக்கிடக்கின்றது. இப்பண்பு இல்லறத்தின் முதன்மையான அறமாகக் கவனத்தில்கொள்ளப்பட்டது. விருந்தோம்பல் பற்றி வள்ளுவர் கூறுகையில் 'நாள்தோறும் தனது இல்லத்திற்கு வந்த விருந்தினரைப் போற்றுகின்றவனுடைய வாழ்க்கையானது துன்பத்தால் கேடுறுவதில்லை' என மொழிகின்றார். இதனையே,

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

எனும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றது.

மேற்குறித்த குறலுக்கிணங்க அக்கால மக்கள் தமது வாழ்வியலில் பிறர்க்குக் கொடுத்து உதவுவதில் மனநிறைவுகொண்டு விளங்கினர். குறிப்பாக மனிதனின் பசியினைத் தீர்த்தல் என்ற நற்பண்பிலிருந்து மேலெழுந்த ஈகை சிறந்த இல்லறக் கடமையாகவும் இல்லறத்தானின் கடமையாகவும் காணப்பட்டிருந்தது. இதனையே 'ஈதலும் துய்த்தலும் இல்லார்க்கு இல்' எனும் வரிகள் சுட்டிநிற்கின்றன.

மேலும் மன்னர்களின் கொடைச்சிறப்பு மிகுந்து போற்றப்படுகின்றமையும் ஆற்றுப்படை இலக்கியங்களின் தனித்துவமான அறப்பண்பாக நோக்கப்பட்டது. அதாவது 'நினைக்க வேண்டா அவன்தாளே', 'தலைப்பாடன்றே அவன் ஈகை' எனும் அடிகள் இதற்கு தக்கசான்றுகளாக விளங்குகின்றன. குறிப்பாக இலக்கியங்களில் மன்னர்களைப் புகழ்ந்துபாடி பரிசுபெறுவது வழக்கமாகக் காணப்பட்டதோடு அவர்களின் கொடைச்சிறப்பும் விதந்துரைக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனின் அறவாழ்வு, மறவாழ்வு

சிறப்பிக்கப்பட்டு, அவனிடம் பரிசில் பெற்ற பாணன் எதிரில்பட்ட இன்னொரு பாணனை வழிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இதனையே, ‘இன்குரல் சீரியாழ் இடவயிற் றழீஇ……’, ‘எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்……..’ எனும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றது.

ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னர்களின் ஆட்சிச் சிறப்புக்கள், நற்பண்புகள் பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்திருக்கின்றன. பொதுவாக மன்னர்கள் மறம்போக்கி அறத்தை நிலைநிறுத்திய செங்கோல் சிறப்புடையவர்கள் என்றும் ‘ஞாயிற்றைப் போலத் தன் அறிவால் விரும்பினவர்க்கு விரும்பினவற்றை அளக்கும் சிறப்புப் பொருந்தியவர்கள்’ (பெரும்பாணா, 442-447) எனப் போற்றப்பட்டார்கள். மேற்குறித்த மன்னர்களின் ஆட்சிச் சிறப்பால் வழிச்செல்வோர்க்கு கள்வரின் துன்பமில்லை, இடியும் அவன் நாட்டில் இடத்து நடுக்கம் செய்யாது, பாம்புகள் பிற உயிர்களைக் கொல்லமாட்டா, காட்டு விலங்குகளும் வழிச்செல்வோர்க்குத் துன்பம் விளைவிக்கமாட்டா எனச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, இளந்திரைய மன்னனின் அரசாட்சியானது,

“அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேறு திரையன் படர்குலிர் ஆயின்……” (பெரும்பாணா, 36-37)

எனச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

எனவேதான், மன்னர்களின் சிறப்பான ஆட்சி முறையானது அறம், தர்மம், நீதி என்பனவற்றை நிலைநாட்டுவதாக அமைந்திருந்தது. அதாவது ‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்’ எனக் கூறவதற்கு ஒப்பானதாகும். இதனாலேயேதான் அக்காலப் புலவர்கள் மன்னர்களைப் பலவாறு புகழ்ந்தும் விளித்தும் பாடியதற்கு அடிப்படைக் காரணமாயிற்று.

ஆற்றுப்படை இலக்கியங்களில் அருளைவேண்டி ஆற்றுப்படுத்துவதும் முதன்மையான பண்பாகக் காணப்பட்டிருந்தது. இதற்கு திருமுருகாற்றுப்படை தக்கசான்றாக விளங்குகின்றது. அதாவது இவ்வுலகத்தில் ‘மண்ணில் நல்ல வண்ணம்’ வாழ வேண்டிய விதிமுறைகள் மற்றும் ஆசாரங்களைச் சரியாகக் கடைப்பிடித்து பரம்பொருளான முருகப்பெருமானிடம் வீடுபேறு பெறும்பொருட்டு ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருந்தது. இதனையே,

“உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன்…….” எனத் திருமுருகாற்றுப்படை வெண்பா அடிகள் சிறப்பித்துக் கூறுகின்றன.

**முடிவுரை**

தொகுத்து நோக்கும்போது ஆற்றுப்படை இலக்கியங்கள் மக்களின் யதார்த்தமான வாழ்வியல் அம்சங்களைப் படம்பிடித்துக்காட்டுவதோடு வாழ்வாங்கு வாழ வேண்டிய நெறிமுறைகளையும் தெளிவாக வலிறுயுத்தியிருக்கின்றமை அறியத்தக்கது. குறிப்பாக இவ்விலக்கியங்கள் இரவலர்களை வழிப்படுத்துவது என்ற நோக்கத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை. இவை அனைத்தையும் தாண்டி பல சிறப்பம்பங்களைக் கொண்டிருக்கிறது என்பதனை இவ்வாய்வு எடுத்துக்காட்டி நிற்கின்றது. இந்தவகையில் தமிழர் பண்பாட்டின் கருவூலமாகத் திகழும் ஆற்றுப்படை இலக்கியங்கள் பல சிறப்புக்களைப்பெற்று தமிழர்களின் கலாசார மற்றும் பண்பாட்டம்சங்களைப் பறைசாற்றி நிற்கின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**உசாத்துணை நூல்கள்**

ஆறுமுகநாவலர்., (உரை) 1971. திருமுருகாற்றுப்படை. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகம்.

ஆய்வரங்கக் கட்டுரைகள்., 1997. கொழும்பு: இந்துசமய கலாசாரத் திணைக்களம்.

இராசமாணிக்கனார். மா., 1996. தமிழ் மொழி - இலக்கிய வரலாறு சங்க காலம். சென்னை: பூங்கொடி பதிப்பகம்.

கைலாசபதி. க., 1966. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். சென்னை: நியூசெஞ்சரி புக் ஹவுஸ்.

கோவிந்தனார். கா., 1996. பெரும்பாணாற்றுப்படை விளக்கவுரை. திருவத்திபுரம்: எழிலகம்.

சிவகுருநாதன். சி., 1990. மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோதம். யாழ்ப்பாணம்: செட்டியர் பதிப்பகம்.

சுப்பிரமணியன். கா., 1982. சங்க காலச் சமுதாயம். சென்னை: நியு செஞ்சரி புக் ஹவுஸ்.

சுப்பிரமணியன். வே. ச., 2006. சங்க இலக்கியம் மூலமும் முழுவதும். மணிவாசகர் பதிப்பகம்.

செல்வநாயகம். வி., 2013. தமிழ் இலக்கிய வரலாறு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

திருமூலர் அருளிய திருமந்திரம், 1968. திருப்பனந்தாள் காசி மட வெளியீடு.

நவநீதகிட்டிணன். மா., 1976. தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை (பதிப்பிக்கப்படாத கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு). மதுரை: மதுரைப் பல்கலைக்கழகம்.

பிள்ளை. கே. கே., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

முருகையன். மு, அறவேந்தன். இரா, தமிழ்வேலு. சு., 2000. சங்க இலக்கிய ஆய்வுகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

வெள்ளைவாரணனார். க., 2002. சைவசித்தாந்த சாத்திர வரலாறு, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

வையாபுரிப்பிள்ளை. எஸ்., 1967. சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்). பாரிநிலையம்.